சுருக்கம்

பணிநியமனம் – அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டம், குழுமூர் கிராமத்தைச் சேர்ந்த செல்வி.ச.அனிதா த/பெ திரு.த.சண்முகம், 01.09.2017 அன்று உயிரிழந்தமைக்கு அவருடைய சகோதரருக்கு – சிறப்பு நிகழ்வாக கருதி அரசு பணி வழங்கி - ஆணை வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(ஏடி2) துறை

அரசாணை (2 பத்தாண்டுகள்) எண்: 199

நாள் : 26.12.2017
திருவள்ளுவர் ஆண்டு–2048
ஹேவிளம்பி, மார்கழி–11

படிக்கப்பட்டது:

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின், அறிவிப்பு நாள் 01.09.2017.
2. மாவட்ட ஆட்சித் தலைவர், அரியலூர் அவர்களின் ந.க.எண்.அ3/6271/2017, நாள் 16.11.2017.

*****

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அறிவிப்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டம், குழுமூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.த.சண்முகம் என்பவரின் மகள் செல்வி.ச.அனிதா என்ற மாணவி 01.09.2017 அன்று தற்கொலை செய்துகொண்டு உயிரிழந்தமைக்கு அவருடைய குடும்பத்திற்கு ரூ.7,00,000/– (ரூபாய் ஏழு லட்சம் மட்டும்) முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி வழங்கவும், மேலும் அவருடைய குடும்பத்தைச் சார்ந்த ஒருவருக்கு கல்வித் தகுதிக்கேற்ப அரசு பணி வழங்கப்படும் எனவும் அறிவித்துள்ளார்.

2. மாண்புமிகு முதலமைச்சர் செய்திக் குறிப்பின் அடிப்படையில் செல்வி.ச.அனிதா என்பவரது குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு கல்வித் தகுதிக்கேற்ப அரசு பணி வழங்க ஏதுவாக தொடர்புடைய அனைத்து ஆவணங்கள் அரியலூர் மாவட்ட ஆட்சியரிடமிருந்து கோரப்பட்டது. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் அரியலூர் மாவட்ட ஆட்சியர், அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டம், குழுமூர் கிராமத்தைச் சேர்ந்த செல்வி.ச.அனிதா த/பெ திரு.த.சண்முகம் என்பவர் 01.09.2017 அன்று தற்கொலை செய்துக் கொண்டு உயிரிழந்துவிட்டார் என்றும் அவருக்கு உடன் பிறந்த சகோதரர்கள் 4 பேர் உள்ளார்கள் என்றும் அவர்களில் 2–வது சகோதரரான திரு.ச.சதீஷ்குமார் என்பவருக்கு அரசு பணி வழங்க அவரது குடும்பத்தில் உள்ள மற்ற அனைவரும் ஆட்சேபணை இல்லை என எழுத்து பூர்வமாக தெரிவித்துள்ளார்கள் என்றும் திரு.ச.சதீஷ்குமார் என்பவர் முதுகலை பட்டம் பெற்றவர் என்றும் தெரிவித்து, அவருக்கு அரசு பணி வழங்க பரிந்துரை செய்துள்ளார்.

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின், அறிவிப்பின் அடிப்படையில் அரியலூர் மாவட்ட ஆட்சியரின் கருத்துருவை அரசு ஏற்றுக்கொண்டு திரு.ச.சதீஷ்குமார் என்பவரை மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள தமிழ்நாடு மூலிகை பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தில் (TAMPCOL) காலியாக உள்ள இளநிலை உதவியாளர்

பணியிடத்தில் சிறப்பு நிகழ்வாக கருதி பணியமர்த்தும்படி தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழக, தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநருக்கு அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ.ராதாகிருஷ்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகம், சென்னை–**600 106.**

திரு.ச.சதீஷ்குமார், த/பெ திரு.த.சண்முகம், பெரியார் நகர், குழுமூர், செந்துறை வட்டம், அரியலூர் மாவட்டம்.

**நகல்:-**

தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, சென்னை–**600 009.**

பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை, சென்னை – **600 009.**

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை (டேட்டா செல்), சென்னை–600 009

இருப்பு கோப்பு / சுத்த நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்